அளிக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. போக்குவரத்து மிகுதியாகும் வாய்ப்பு இருந்தால் மீண்டும் அதை புதுப்பிப்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

அண்ணா விவசாயப் பண்ணையில் பழச் செடிகள் கொள்முதல்.

* வினா எண். 168—திரு. துரை முருகன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் குடுமியான் மலையில் உள்ள அறிஞர் அண்ணா விவசாயப் பண்ணைக்கு நடப்பாண்டில் (1977–78) பழச் செடிகள் ஏதேனும் வாங்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது ?

(இ) அப்படி வாங்கி இருந்தால் வாங்குவதில் எந்த முறை கையாளப்பட்டது?

(ஈ) தனியார் நர்சரிகளில் அப்பழச் செடிகள் வாங்கப்பட்டனவா ?

(உ) ஆம் எனில், யார் யாரிடத்தில் எந்த அடிப்படையில் எவ்வளவு செடிகள் வாங்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :— (அ) ஆம்.

(ஆ) ரூ. 8,580க்கு, 7,800 மாங்கன்றுகள் ஒட்டு செய்வதற்காக வாங்கப்பட்டன.

(இ) தனியார் நாற்றுப் பண்ணைகளிலிருந்து விலைப்பட்டியல் வாங்கப்பட்டன. விலை குறைவான விலைப் பட்டியலை ஏற்றுக் கொண்டு அதைக் கொடுத்த நிறுவனத்திடமிருந்து மாங்கன்றுகள் வாங்கப்பட்டன.

(ஈ) ஆம்.

(உ) குறைந்த விலைப் பட்டியலைக் கொடுத்த திருப்பத்தூர் வி. சிவராம் பிரசாத் நிறுவனத்திடமிருந்து 7,800 மாங்கன்றுகள் வாங்கப்பட்டன.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவரவர்களே, முதலில் நான் தெரிவிக்க விரும்புவது, அண்ணா பண்ணை புதுக்கோட்டை ஜில்லாவில் இருக்கிறது. திருச்சி ஜில்லாவில் இருப்பதாக இந்தக் கேள்விப் பட்டியலில் போட்டு

1978 செப்டம்பர் 12]

இருக்கிறார்கள். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்திலே, இவ்வளவு பெரிய பண்ணையிலே அங்கேயே உற்பத்தி செய்து சப்சிடி ரேட்டில் விவசாயிகளுக்குக் கொடுக்கிற நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா விவசாயப் பண்ணை, குடுமியான்மலை பண்ணை, புதுக்கோட்டை மாவட்டத்தில் இருக்கிறது. தவறாக திருச்சி மாவட்டம் என்று அந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. தரமான பழச்செடிகள் உற்பத்தி செய்வதற்கு இந்த ஆண்டிலே மட்டும் 293 ஏக்கரில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பழச்செடிகள் கொடுக்கும் திட்டத்தைத் தீட்டி அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர் காப்புத் திட்டம்.

*வினா எண் 169—திரு. மா. மணிமாறன், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பயிர் காப்புத் (Insurance) திட்டத்தினை செயல் படுத்துவது குறித்து மைய அரசிடம் இருந்து குறிப்பு ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம். பயிர்காப்பு பற்றி முன்னோடித் திட்டமொன்றினை இவ்வரசின் கருத்தினைக்கோரி மத்திய அரசு 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அனுப்பி வைத்துள்ளது. அதன் மீது அரசின் கருத்து இன்னும் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் ஆர்வம் அதிகம் உள்ளவர்கள். ஆகையால் இந்த மாநில ஏழை விவசாயிகளின் துயர் துடைக்க அரசு விரைவிலே நடவடிக்கை எடுத்து, இந்தப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது; அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.